## மாமன்றக் கூட்டம்

| | | |
|---|---|---|
| **கோப்பு எண்** | - | **ந.க.எண் ( 7418/2017/ எம்.சி. 8 )** |
| **நாள்** | - | **17.08.2017 மாலை 3.00 மணி** |
| **தலைமை** | - | **டாக்டர் க. விஜயகார்த்திகேயன், இ.ஆ.ப.,<br>ஆணையாளர் மற்றும் தனி அதிகாரி,<br>கோயம்புத்தூர் மாநகராட்சி** |
| **கலந்துகொண்டோர்** | - | **துணை ஆணையர்,<br>அனைத்து துறை தலைமைகள்,<br>அனைத்து மண்டல உதவி ஆணையர்கள்** |

---

## பொருள் எண் 1

பொருள் : கோயம்புத்தூர் மாநகராட்சி – வருவாய்ப் பிரிவு - கேளிக்கை வரி- தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் கேளிக்கை வரிச்சட்டம் 2017 – தமிழ்திரைப்பட வர்த்தகசபை, தமிழ்நாடு திரைப்பட தயாரிப்பாளர்கள் சங்கம், தமிழ்திரைப்பட சம்மேளனம், தென்னிந்திய திரைப்பட சபை ஆகிய சங்கங்கள் கேளிக்கை வரியினை இரத்து செய்யக்கோரியும் திரைப்பட நுழைவு சீட்டு விலையினை உயர்த்தக் கோருவது – தொடர்பாக.

பார்வை :
1. நகராட்சி நிர்வாக ஆணையாளர் அலுவலக கடிதம் ந.க.எண். 17934/2017/ஆர்1 நாள். 17.08.2017
2. ஆணையாளர் மற்றும் தனிஅலுவலர் அவர்களின் உத்திரவு நாள். 17.08.2017.

---

1939 ஆம் ஆண்டு தமிழ்நாடு கேளிக்கைகள் வரிச் சட்டத்தின்படி, திரைப்படங்கள் உள்ளிட்ட ஏனையை கேளிக்கைகள் மீது கேளிக்கை வரி விதித்து வசூலிக்கப்பட்டு வந்தன. இந்த சட்டம் நீக்கரவு செய்யப்பட்ட நிலையில், 2017–ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் கேளிக்கை வரிச்சட்டம் இயற்றப்பட்டது. இச்சட்டமானது 1.7.2017 முதல் நடைமுறைக்கு வந்துள்ளது. இச்சட்டத்தில் உள்ளாட்சி அமைப்புகள் திரைப்படங்கள் உள்ளிட்ட கேளிக்கைகள் மீது வரி விதிப்பதற்கும், வசூலிப்பதற்கும் வழிவகை செய்யப்பட்டு உள்ளது. இச்சட்டம் நடைமுறைக்கு வந்ததைத் தொடர்ந்து, தமிழ் திரைப்பட வர்த்தக சபை, தமிழ்நாடு திரைப்பட தயாரிப்பாளர்கள் சங்கம், தமிழ் திரைப்பட சம்மேளனம், தென்னிந்திய திரைப்பட சபை ஆகிய சஙகங்கள் கேளிக்கைகள் வரியினை ரத்து செய்யவும், திரைப்படத்திற்கான நுழைவுச் சீட்டினுடைய விலையினை உயர்த்தவும் மற்றும் சில கோரிக்கைகளை அரசுக்கு வைத்து உள்ளனர். இச்சட்டத்தின் 11 ஆம் பிரிவின்படி, எந்த ஒரு கேளிக்கை அல்லது கேளிக்கைகளின் வகைகள் மீது விதிக்கப்படும் கேளிக்கை வரியிலிருந்து உள்ளாட்சி மன்றத்தின் தீர்மானத்தின் அடிப்படையில், அரசு பொருத்தமெனக் கருதும் நிபந்தனைகளுக்குட்பட்டு, விலக்களிக்கலாம் அல்லது கேளிக்கைகள் மீது விதிக்கப்பட்ட வரியை தள்ளுபடி (Remission) செய்யலாம். இச்சங்கங்களின் கோரிக்கைகளை அரசு பரிசீலிப்பதற்கு ஏதுவாக உள்ளாட்சி மன்றங்களின் கருத்துகளைப் பெற்று அனுப்புமாறு அரசு கேட்டுக் கொண்டுள்ளதன் அடிப்படையில் (அரசு கடித எண்.14781 / தேர்தல் / 2017–1, நாள்: 1.8.2017) நகராட்சி நிர்வாக ஆணையர் அதனை மேலனுப்பி மன்றத்தின் கருத்துக்களையும், பரிந்துரைகளையும் அனுப்பி வைக்குமாறு கேட்டு கொண்டுள்ள கடிதம் மன்றத்தின் பார்வைக்கும் முடிவுக்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு : ஒப்புதல் அளிக்கலாம். ந.க.எண்.7391 /2017/எம்.ஏ1

## மாநகர மன்ற தீர்மானம் எண் 204 நாள் 17.08.2017

ஒப்புதல் அளிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 2

பொருள் : கோயம்புத்தூர் மாநகராட்சி – பொதுசுகாதாரம் – நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளில் மாநகராட்சியில் பணிபுரிந்து வரும் துப்புரவுப் பணியாளர்களுக்கு நகராட்சி நிதியின் கீழ் சிறப்பு ஆயுள் காப்பீட்டுத் திட்டம் செயல்படுத்தப்படும் என அறிவிப்பு வெளியிடப்பட்டது – அரசாணை பெறப்பட பிரேரணை அனுப்புதல் – மன்றத்தீர்மானம் – தொடர்பாக.

---

கோயம்புத்தூர் மாநகராட்சியில் 3226 துப்புரவுப் பணியாளர் பணியிடங்கள் அனுமதிக்கப்பட்டுள்ளன. இதில் தற்பொழுது 1618 ஆண்கள் 901 பெண்கள் என மொத்தம் 2519 துப்புரவுப்பணியாளர்கள் பணியில் உள்ளனர். இவர்கள் அந்தந்த மண்டலஙகளில் உள்ள வார்டு பகுதிகளில் உள்ள தெருக்களில் சேரும் குப்பை கழிவுகள், தூசிமணல்கள், சந்தை மற்றும் பேருந்து நிலையஙகளில் சேரும் திடக்கழிவுகளை அகற்றுதல், மழைநீர் வடிகால்களில் ஏற்படும் அடைப்புகளை நீக்குதல் போன்ற அத்தியாவசிய அடிப்படை பணிகளை சுற்றுசூழலுக்கு பாதிப்புகள் ஏற்படாதவாறு பொதுமக்களின் சுகாதாரத்திற்காக செய்து வருகின்றனர். இதனால் இந்த துப்புரவுப்பணியாளர்களுக்கு அடிக்கடி உடல்நலக் குறைவு ஏற்படுவதுடன் உயிர் இழப்புகளும் ஏற்பட வாய்ப்புகள் அதிகம் இருப்பதால், இதுபோன்ற சூழ்நிலைகளிலிருந்து இப்பணியாளர்களையும் இவர்களது குடும்பத்தினரையும் பாதுகாக்க ஏதுவாக மாநகராட்சியின் பங்களிப்புடன் சிறப்பு ஆயுள் காப்பீட்டு திட்டம் செயல்படுத்த ஏதுவாக அரசிற்கு கருத்துரு அனுப்ப மாமன்றத்தின் அனுமதி வேண்டி மாமன்றப் பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு : அனுமதிக்கலாம் ந.க.எண். 6678/2017/எம்.இ3

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 205 நாள் 17.08.2017</u>**

அனுமதிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 3

கோயம்புத்தூர் மாநகராட்சி மேற்கு மண்டலம் வார்டு எண்.15,16,17,18,20, மற்றும் 21க்குட்பட்ட பகுதிகளில் ஆழ்குழாய் கிணறு அமைத்தல் மற்றும் குடிநீர்வினியோக குழாய் பதித்தல் பணிகளுக்கு ஒப்பந்தப்புள்ளி கோர நிர்வாக அனுமதி வேண்டி மாமன்றத்திற்கு பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

| வ.எண் | வார்டு எண் | பணியின் பெயர் | மதிப்பீடு (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|---|
| 1 | 16,17 | கோயம்புத்தூர் மாநகராட்சி மேற்கு மண்டலம் வார்டு எண்.15,16,17,18,19,20 மற்றும் 21ல் விடுபட்ட பகுதிகளில் குடிநீர் விநியோகக்குழாய் பதித்தல் பணி<br>ந.க.எண். 7246/2017/எம்டி2 | 75.00 |
| 2 | 16,17 | கோயம்புத்தூர் மாநகராட்சி மேற்கு மண்டலம் வார்டு எண்.15 மற்றும் 16ல் பகுதிகளில் ஆழ்குழாய் கிணறு அமைத்தல் மற்றும் திறந்தவெளி கிணற்றினை தூர்வாருதல்.<br>ந.க.எண். 7247/2017/எம்டி2 | 50.00 |

மேற்காண் பட்டியலில் குறிக்கப்பட்டுள்ள பணிகளுக்கு மான்றத்தின் நிர்வாக அனுமதி வேண்டி பொருள் சமர்பிக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு : அனுமதிக்கலாம் ந.க.எண். 7246/2017/எம்.டி.2

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 206 நாள் 17.08.2017</u>**

அனுமதிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 4

கோயம்புத்தூர் மாநகராட்சி மேற்கு மண்டலம் வார்டு எண்.16, மற்றும் 17க்குட்பட்ட பகுதிகளில் மழைநீர் வடிகால் மற்றும் சிமெண்ட் கான்கிரீட் தளம் மற்றும் நூலக கட்டிடத்திற்கு மராமத்து பணிகளுக்கு ஒப்பந்தப்புள்ளி கோர நிர்வாக அனுமதி வேண்டி மாமன்றத்திற்கு பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

| வ.எண் | வார்டு எண் | பணியின் பெயர் | மதிப்பீடு (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|---|
| 1 | 16,17 | கோயம்புத்தூர் மாநகராட்சி மேற்கு மண்டலம் வார்டு எண்.16 மற்றும் 17ல் உள்ள மருதாபுரம், பி.எப்காலனி, இந்திரா நகர் மற்றும் அன்பு நகர் பகுதிகளில் மழைநீர் வடிகால் மற்றும் சிமெண்ட் கான்கீரீட் தளம் அமைத்தல். ந.க.எண். 7250 /2017/எம்டி2 | 75.00 |
| 2 | 16,17 | கோயம்புத்தூர் மாநகராட்சி மேற்கு மண்டலம் வார்டு எண்.16 மற்றும் 17ல் உள்ள திருமுருகன் நகர் நூலகத்திற்கு மராமத்து பணிகள் செய்தல் மற்றும் நாராயணசாமி நகர் பகுதியில் நடைபாதை அமைத்தல். ந.க.எண். 7248/2017/எம்டி2 | 68.50 |
| 3 | 17 | கோயம்புத்தூர் மாநகராட்சி மேற்கு மண்டலம் வார்டு எண்.17ல் மருதமலை பிரதான சாலையில் சின்னசாமி வீதி முதல் தொண்டாமுத்தூர் பிரதான சாலை வரை மழைநீர் வடிகால் கட்டுதல். ந.க.எண்.7249/2017/எம்டி2 | 75.00 |

மேற்காண் பட்டியலில் குறிக்கப்பட்டுள்ள பணிகளுக்கு மான்றத்தின் நிர்வாக அனுமதி வேண்டி பொருள் வைக்கலாம் .வரைவு மாமன்ற கூட்டத்தாள் ஒப்புதலுக்காக

அலுவலக குறிப்பு : அனுமதிக்கலாம் ந.க.எண். 7250/2017/எம்.டி.2

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 207 நாள் 17.08.2017</u>**

அனுமதிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 5

கோயம்புத்தூர் மாநகராட்சியினை ஒட்டி அமைந்துள்ள மூன்று நகராட்சிகள், ஏழு பேரூராட்சிகள், ஒரு கிராம ஊராட்சி ஆகிய உள்ளாட்சி அமைப்புகளை கோயம்புத்தூர் மாநகராட்சியுடன் இணைக்கப்பட்டு மாநகராட்சியின் பகுதிகள் 2011-ம் ஆண்டு முதல் விரிவாக்கம் செய்யப்பட்டு, ஏற்கனவே 72 வார்டுகளாக இருந்த மாநகராட்சியின் வார்டுகள் 2011ம் ஆண்டு முதல் 100 வார்டுகளாக செயல்பட்டு வருகிறது.

மேற்படி பகுதிகளில் மொத்தம் 75830 எண்ணிக்கையிலான தெருவிளக்குகள் மாநகராட்சி மூலம் பராமரிக்கப்பட்டு வருகின்றன. இதில் புதிதாக இணைக்கப்பட்ட வார்டு பகுதிகளில் 25296 எண்ணிக்கையிலான தெருவிளக்குகள் PPP முறையில் 40 வாட்ஸ் குழல்விளக்குகளை (Tube light) மட்டும் உரிய ஒளிர் மின் உமிழ் (LED) விளக்குகளாக மாற்றப்பட்டுள்ளன. இதர வகை தெருவிளக்குகளுக்கு மின்சேமிப்பு உபகரணங்கள் பொருத்தி மின் சேமிப்பு நிறுவனங்கள் மூலம் (ESCO – I model) பராமரிக்கப்பட்டு வருகிறது. இத்திட்டம் தனியார் பங்களிப்பு 50% மற்றும் உள்ளாட்சி பங்களிப்பு 50% என்ற மூலதன முதலீட்டில் செயல்படுத்தப்பட்டுள்ளது. இதனால் தெரு விளக்குகளின் மின்சாரா உபயோகத்தில் 40% முதல் 50% வரை மின்சேமிப்பு ஏற்படுகிறது.

மேற்படி 25296 தெருவிளக்குகள் தனியார் மின் சேமிப்பு நிறுவனம் (ESCO) மூலம் 10 ஆண்டுகள் இயக்கி பராமரிக்கப்பட்டு மாதந்தோறும் மாநகராட்சி பொது நிதி மூலம் பராமரிப்பு தொகை மேற்படி நிறுவனத்திற்கு வழங்கப்பட்டு வருகிறது.

கோயம்புத்தூர் மாநகராட்சிக்குட்பட்ட பழைய 60 வார்டு பகுதிகளில் 50534 எண்ணிக்கையிலான பல்வேறு வகையான தெருவிளக்குகளை தனியார் ஒப்பந்ததாரர் மூலம் பராமரிக்கப்பட்டு வருகிறது. மின் சேமிப்பு ஏற்படுத்த மேற்படி விளக்குகளுக்கு சம அளவு பிரகாசம் உள்ள LED விளக்குகளாக மாற்றம் செய்யவும், இத்திட்டத்தினை 100% சதவீதம் தனியார் மின்சேமிப்பு நிறுவனத்தின் (ESCO) மூலதனம் முதலீடு மூலம் மேற்கொள்ளவும் உத்தேசிக்கப்பட்டு உள்ளது. இதனால் ஏற்படும் மாதாந்திர மின்சேமிப்பு தொகையில் ESCO நிறுவனத்திற்கும் மாநகராட்சிக்கும் பங்கீட்டுக்கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ளது.

மேற்படி விளக்குகள் அனைத்தையும் உரிய ஒளிர் மின் உமிழ் (LED) விளக்குகளாக மாற்றி அமைத்திட தோரயமாக ரூ.50.00 கோடி செலவினம் ஆகும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது. மேற்படி செலவினத்தை தனியார் மின்சேமிப்பு நிறுவனங்களின் மூலமாக PPP முறையில் செயல்படுத்திட உத்தேசிக்கப்பட்டுள்ளது. இது குறித்து அரசுக்கு உரிய கருத்துருவை நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்கள் மூலமாக அரசுக்கு சமர்ப்பித்து உரிய அரசாணை பெற்று திட்டம் செயல்படுத்திட மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு:-அனுமதிக்கலாம் ந.க.எண். 7001 /17/MD3

**மாநகர மன்ற தீர்மானம் எண் 208 நாள் 17.08.2017**

அனுமதிக்கப்பட்டது.

---

**பொருள் எண் 6**

பொருள் : குடிநீர் விநியோகக்கணக்குப்பிரிவு – கோயம்புத்தூர் மாநகராட்சியுடன் இணைக்கப்பட்ட உள்ளாட்சி அமைப்புகளின் – குடிநீர் கட்டணம் – உயர்த்துதல் – தொடர்பாக.

* * * * * * *

கோயம்புத்தூர் மாநகராட்சியுடன் இணைக்கப்பட்ட 11–உள்ளாட்சி அமைப்புகளின் குடிநீர்க்கட்டணம் தற்போது கீழ்க்கண்டவாறு நிர்ணயம் செய்யப்பட்டு வசூலிக்கப்பட்டு வருகிறது.

COIMBATORE CORPORATION

WATER TARIFF DETAILS IN ADDED AREAS (CURRENT TARIFF)

| Sl. No | WARDS | AREA | DOMESTIC | | NON DOMESTIC | | INDUSTRIAL | | TOTAL | REMARKS |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | No.of HSC | Tax | No.of HSC | Tax | No.of HSC | Tax | Rs. | |
| 1 | 87,88,89,90,91,92 & 93 | Kuniyamuthur | 16766 | 100 | 99 | 200 | Nil | 200 | 1696400 | |
| 2 | 94,95,96,97,98,99 & 100 | Kurichi | 19152 | 55 | 196 | 110 | 2 | 110 | 1075140 | |
| 3 | 5,6,7,8 & 9 | Goundampalayam | 18865 | 60 | 303 | 120 | Nil | 180 | 1168260 | |
| 4 | 16 & 17 | Vadavalli | 10092 | 50 | 62 | 100 | Nil | 100 | 510800 | |
| 5 | 18 & 19 | Veerakeralam | 6814 | 50 | 39 | 100 | Nil | 100 | 344600 | |
| 6 | 32 | Vilankurichi | 10173 | 30 | 18 | 60 | 1 | 120 | 306390 | |
| 7 | 1,2,3 & 4 | Thudiyalur | 9625 | 60 | 44 | 120 | Nil | 180 | 582780 | |
| 8 | 27 & 42 | Chinnavedampatti | 5113 | 60 | 18 | 120 | Nil | 180 | 308940 | |
| 9 | 26 & 43 | Vellakinar | 4642 | 60 | 19 | 120 | Nil | 180 | 280800 | |
| 10 | 28,29,30 & 31 | Saravanampatti | 10512 | 60 | 74 | 120 | Nil | 180 | 639600 | |
| 11 | 33,34,35 & 36 | Kalapatti | 16390 | 60 | 129 | 120 | 357 | 180 | 1063140 | |
| | | | | | | | | TOTAL | 7976850 | |

கோயம்புத்தூர் மாநகராட்சியுடன் இணைக்கப்பட்ட 11–உள்ளாட்சி அமைப்புகளில் நாளது தேதிவரை நீர்மானிய கருவி பொருத்தப்படவில்லை. 11–உள்ளாட்சி அமைப்புகளிலும் ஒரே மாதிரியான கட்டணம் இல்லாததை சரிசெய்யும் பொருட்டு, இணைக்கப்பட்ட பகுதிகளில் உள்ள குடிநீர் குழாய் இணைப்புகளுக்கான குடிநீர்க்கட்டணம் கீழ்க்கண்டவாறு நிர்ணயம் செய்யலாம்.

COIMBATORE CORPORATION

WATER TARIFF DETAILS IN ADDED AREAS (REVISED TARIFF )

| Sl. No | WARDS | AREA | DOMESTIC | | NON DOMESTIC | | INDUSTRIAL | | TOTAL | REMARKS |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | No.of HSC | Tax | No.of HSC | Tax | No.of HSC | Tax | Rs. | |
| 1 | 87,88,89,90,91,92 & 93 | Kuniyamuthur | 16766 | 150 | 99 | 300 | 0 | 450 | 2544600 | |
| 2 | 94,95,96,97,98,99 & 100 | Kurichi | 19152 | 150 | 196 | 300 | 2 | 450 | 2932500 | |
| 3 | 5,6,7,8 & 9 | Goundampalayam | 18865 | 150 | 303 | 300 | 0 | 450 | 2920650 | |
| 4 | 16 & 17 | Vadavalli | 10092 | 150 | 62 | 300 | 0 | 450 | 1532400 | |
| 5 | 18 & 19 | Veerakeralam | 6814 | 150 | 39 | 300 | 0 | 450 | 1033800 | |
| 6 | 32 | Vilankurichi | 10173 | 150 | 18 | 300 | 1 | 450 | 1531800 | |
| 7 | 1,2,3 & 4 | Thudiyalur | 9625 | 150 | 44 | 300 | 0 | 450 | 1456950 | |
| 8 | 27 & 42 | Chinnavedampatti | 5113 | 150 | 18 | 300 | 0 | 450 | 772350 | |
| 9 | 26 & 43 | Vellakinar | 4642 | 150 | 19 | 300 | 0 | 450 | 702000 | |
| 10 | 28,29,30 & 31 | Saravanampatti | 10512 | 150 | 74 | 300 | 0 | 450 | 1599000 | |
| 11 | 33,34,35 & 36 | Kalapatti | 16390 | 150 | 129 | 300 | 357 | 450 | 2657850 | |
| | | | | | | | | TOTAL | 19683900 | |

மேற்குறிப்பிட்டுள்ள மாதாந்திர குடிநீர் கட்டணங்கள் மாநகாட்சியுடன் புதிதாக இணைக்கப்பட்டுள்ள, தற்சமயம் குடிநீர் திட்ட பணிகள் நடைபெற்று குடிநீர்மானி பொருத்தப்படவுள்ள கவுண்டம்பாளையம், வடவள்ளி வீரகேரளம் பகுதிகள் மற்றும் குடிநீர் திட்டப்பணிகள் மேற்கொள்ளப்பட உள்ள இதர 8 உள்ளாட்சி அமைப்புகளுக்கு குடிநீர்மானி பொருத்தப்படும் வரை மாதாந்திர குடிநீர் கட்டண அடிப்படையில் வசூலிக்கலாம்.

இக்கட்டண விபரங்களை மாமன்ற ஒப்புதல் பெற்று 01.10.2017 முதல் நடைமுறைப்படுத்த மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு: அனுமதிக்கலாம் ந.க.எண். 7245/ 2017 / எம்.டி1.

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 209 நாள் 17.08.2017</u>**

அனுமதிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 7

கோயம்புத்தூர் மாநகராட்சிக்கு சொந்தமான வெள்ளலூர் பகுதியில் தெற்கு மண்டல பகுதிகளுக்கென தனியாக டிரக் டெர்மினல் அமைக்க 19.10.2015-ம் தேதி மறு ஒப்பந்தபுள்ளியாக விருப்ப கேட்பு அறிக்கை கோரப்பட்டது.

பெறப்பட்ட ஒப்பந்தபுள்ளிகளில் தொழில் நுட்ப தகுதியில் தேர்வு பெற்ற தி/ள்.மகேந்திரா கன்சல்டிங் இன்ஜினீயர்ஸ், அளித்த விலைப்புள்ளிகளை மாண்புமிகு மேயர் அவர்களின் 17.11.2015-ம் தேதிய முன் அனுமதியுடன் ஏற்கப்பட்டு இந்நிறுவனத்திற்கு பணி உத்திரவு வழங்கப்பட்டது. மேலும் இது தொடர்பாக மாமன்றத்திற்கு பொருள் வைக்கப்பட்டு மாமன்றம் தனது தீர்மான எண்.8 நாள் 24.06.2016-ல் ஒப்புதல் அளித்துள்ளது.

இதனைத் தொடர்ந்து இந்நிறுவனம் இடைக்கால திட்ட அறிக்கையினை தயாரித்து அளித்தனர்.

தற்பொழுது இத்திட்ட ஆலோசகர்கள், டிரக் டெர்மினல் அமைக்க ரூ.63.39 கோடி மதிப்பீட்டிற்கு இறுதி திட்ட அறிக்கை அளித்துள்ளனர்.

இத்திட்டத்திற்கு தேவையான நிதியினை TNUFISIL அல்லது TUFIDCO நிறுவனங்களிடம் இருந்து பெறவும், கூடுதலாக தேவைப்படும் நிதியினை மாநகராட்சி பொது நிதியின் மூலம் மேற்கொள்ள அனுமதிக்கவும் மேலும், இப்பணிக்கு நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் நிர்வாக அனுமதி வேண்டி பிரேரணை அனுப்ப மன்றத்தின் ஒப்புதல் வேண்டி பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலககுறிப்பு : அனுமதிக்கலாம் ந.க.எண்.6490/2015/எம்.டி.4

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 210 நாள் 17.08.2017</u>**

அனுமதிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 8

பொருள் பணியமைப்பு – கோயம்புத்தூர் மாநகராட்சி – திரு.கே. ஆறுச்சாமி, துணை ஆய்வாளர் (ஓய்வு) – இம்மாநகராட்சியில் நகர்சார் ஆய்வாளராக ஒருவருடத்திற்கு மறுநியமனம் செய்வது – தொடர்பாக.

பார்வை
1. திரு.கே. ஆறுச்சாமி, துணை ஆய்வாளர் (ஓய்வு), கோவை அவர்களின் விண்ணப்பம் நாள்.27.06.2017.
2. ஆணையாளர் அவர்களின் ஆணை நாள்.30.06.2017
3. இதே எண்ணிட்ட இவ்வலுவலக கடிதம் நாள்.04.07.2017
4. மாவட்ட ஆட்சித் தலைவர், கோயம்புத்தூர் அவர்களின் கடித ந.க.அ1 / 5047 / 2017(நி.அ) நாள்.25.07.2017
5. அரசாணை (எம்எஸ்) எண்.170 பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்தத் (எஸ்) துறை, நாள்.18.12.2009

-------

பார்வை 1ல் காணும் விண்ணப்பத்தில், திரு.கே. ஆறுச்சாமி, துணை ஆய்வாளர் (ஓய்வு) அவர்கள் தான் உதவி இயக்குநர், கோவை மாவட்ட நில அளவை அலுவலகக் கட்டுப்பாட்டில் பணிபுரிந்து 31.08.2012 அன்று ஓய்வு பெற்று விட்டதாகவும், தமிழக அரசுப் பணியில் 31 ஆண்டுகள் பணிபுரிந்துள்ளதாகவும் தெரிவித்துள்ளார். கோவை மாநகராட்சியில் 1997 முதல் 2000 வரை தெற்கு நகரசார் ஆய்வாளராகப் பணிபுரிந்துள்ளதாகவும், தனக்கு கோயம்புத்தூர் மாநகராட்சியில் மறுபணி வழங்குமாறும் கோரியுள்ளார்.

இது தொடர்பாக பார்வை 3ல் காணும் கடிதத்தின் மூலம் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களுக்கு, கோயம்புத்தூர் மாநகராட்சியில் நகரசார் ஆய்வாளர் பணியிடமானது மாநகராட்சி மூலம் பூர்த்தி செய்யப்படுவதில்லை என்றும் உதவி இயக்குநர், கோவை மாவட்ட நில அளவை அலுவலகம் மூலமாக நகரசார் ஆய்வாளர் பணியிடத்திற்கு தேவையான நபர்களை இம்மாநகராட்சிக்கு அயற்பணி அடிப்படையில் பூர்த்தி செய்யப்பட்டு வருகிறது என்றும், மேலும் ஓய்வு பெற்ற அலுவலர்களின் மறுநியமனமானது அந்தந்த நியமன அலுவலரால் செய்யப்பட வேண்டும் என்பதாலும் இம்மாநகராட்சியில் நில அளவுப் பணிகளை விரைவாக மேற்கொள்ளும் பொருட்டும், இவரது பணி முன் அனுபவத்தினைக் கருத்திற்கொண்டும் இவரை இம்மாநகராட்சியில் மறு நியமன அடிப்படையில் பணியமர்த்தி தகுந்த உத்திரவினைப் பிறப்பிக்குமாறு கேட்டு திரு.கே. ஆறுச்சாமி, துணை ஆய்வாளர் (ஓய்வு) அவர்களின் விண்ணப்பத்தின் நகலினை அனுப்பி வைக்கப்பட்டது.

பார்வை 4ல் காணும் மாவட்ட ஆட்சித் தலைவர், கோயம்புத்தூர் அவர்களின் கடிதத்தில் சென்னை, நில அளவை மற்றும் நிலவரித்திட்ட இயக்குநரின் 15.05.2015ம் தேதிய சுற்றறிக்கையின்படி விதிமுறைகளை நியமனம் மேற்கொள்ளும் போது கீழ்க்கண்டவாறு தவறாமல் கடைபிடிக்குமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஓய்வு பெற்ற சார் ஆய்வாளர் / துறை ஆய்வாளர்களை ஒப்பந்த அடிப்படையில் மீள பணியமர்த்துதல் குறித்தும், அவர்களுக்கு வழஙக வேண்டிய பணிகள் குறித்தும் கடைபிடிக்க வேண்டிய முக்கிய வழிமுறைகள்

1 நில அளவை பணியானது, குறிப்பாக புலப்பணிகளை ஆதாரமாக கொண்டுள்ளதால் 63 வயதிற்கு மிகாத ஓய்வு பெற்ற சார் ஆய்வாளர் அல்லது அதற்கு மேல்நிலைப் பணியில் இருந்து ஓய்வு பெற்ற நில அளவை அலுவலர்கள் மட்டுமே விண்ணப்பத்தின் பேரில் மீள பணியமத்துதல் நலம், (preferable) இயலாத நிலையில், விண்ணப்பத்தின் பேரில் ஆட்களை தேர்வு செய்யலாம். மேலும் சம்பந்தப்பட்ட நபர்களிடம் மருத்துவ தகுதி சான்றிதழ் பெற்ற பிறகே பணியமர்த்தப்பட வேண்டும். மேலும் எக்காரணம் கொண்டும், சார் ஆய்வாளர் தகுதிக்கு குறைவான தகுதியில் பணிபுரிந்து ஓய்வு பெற்ற நபர்களை பணி அமர்த்தக் கூடாது எனவும் தெரிவிக்கப்படுகிறது.

2 இவ்வாறு ஓய்வு பெற்ற நபர்களை பணியமர்த்தும் பொருட்டு ஏற்கனவே பணியில் திறமை பெற்றிருந்தவர்களையும், குற்றச்சாட்டுகளுக்கு உட்படாதவர்களையும் தெரிவு செய்யும் வகையில், உதவி இயக்குநர் தலைமையில், மாவட்டத்தில் முதுநிலையில் மூத்த ஆய்வாளர் மற்றும் தொழில்நுட்ப அலுவலர் தலைமையிலான குழுவை ஏற்படுத்தி மீண்டும் வேலை வாய்ப்பு வழங்கக் கோரி விண்ணப்பித்தோரின் மனுக்களை பரிசீலித்து ஒவ்வொரு மாவட்டத்திற்கும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள பணியிடங்களின் எண்ணிக்கைக்கு மிகாமல் முற்றிலும் தகுதி அடிப்படையில் (purely based on merit) நபர்களை தெரிவு செய்து ஒப்பந்த பணியில் ஈடுபடுத்தப்பட வேண்டும்.

3 இவ்வாறு தெரிவு செய்தபின், அவர்களுக்கு உரிய ஒப்பந்த பணி நியமனம் குறித்த ஆணை வழஙகுவதுடன் அனைத்து நிபந்தனைகளையும் குறிப்பிட்டு ஒப்பந்த பத்திரத்தில் கையெழுத்து பெற வேண்டும். குறிப்பாக முன்னறிவிப்பின்றி அவர்களது ஒப்பந்தப்பணி ரத்து செய்யப்படும் என்ற நிபந்தனை குறிப்பிட வேண்டும். மேலும், இவர்களது பணியில் ஒழுஙகீனங்கள் மற்றும் குறைபாடுகள் இருப்பின் ஒப்பந்த நியமனம் ரத்து செய்யப்படுவதுடன் ஓய்வூதிய விதிகளின் கீழ் ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்ற நிபந்தனையும் ஒப்பந்தத்தில் குறிப்பிடப்படவேண்டும்.

4 ஓய்வு பெற்ற பணியாளர்களை பணியமர்த்தும்போது, நிலஅளவை பணியில் அவர்களுக்குள்ள அனுபவத்தினை பயன்படுத்திக் கொள்ளும் வகையில், குறிப்பாக அவர்களை திட்டப்பணிகளில் அதாவது நில அளவர்களுக்கான நிலஅளவை பயிற்சி வழங்குதல், மறுநிலஅளவைப்பணி, நிலவரித்திட்டப்பணி போன்ற அத்தியாவசியப் பணிகளில் ஈடுபடுத்தப்படவேண்டும்.

5 நகர நில அளவை பணிகளில் மற்றும் மறுநில அளவை திட்டப் பணிகளின் மூலம் நிலஅளவை கற்கள் புதுப்பித்தல் போன்ற பணிகளுக்கு பயன்படுத்தலாம்.

6 மேலும் புதிய நில அளவர்களுக்கு நில அளவை பயிற்சி வழங்கவும், புதிய நில அளவர்களை புலத்திற்கு அழைத்து சென்று புலப்பணி செய்ய பயிற்சி வழங்கவும் பயன்படுத்தலாம்.

7 மாவட்ட நிர்வாகத்தின் அறிவுறுத்தல் பேரில் தெரிவிக்கப்படும் நிலஅளவை பணிகள் தொடர்பாக (நில ஆர்ஜிதம் மற்றும் நில ஒப்படை போன்றவைகள்) அவசரம் கருதி குறைந்த கால நிர்ணயத்தில் பணி ஒதுக்கீடு செய்யலாம். அப்பணி முடிந்ததும் உடனடியாய் வேறு பணிகள் மேற்படி நபர்களுக்கு வழங்கப்பட வேண்டும். எக்காரணம் கொண்டும் நிலஅளவைப் பணிகளைத் தவிர வேறு பணிகளில் மேற்படி நபர்களை ஈடுப்படுத்தக்கூடாது.

தவிர்க்கப்பட வேண்டியவை

1 வட்ட அலுவலகங்களில் உள்ள குறுவட்ட அளவர்அல்லது வட்ட சார் ஆய்வாளர் போன்ற Designated Postகளில் இவர்களை பணியமர்த்தக்கூடாது. வேறு பணிகளின் (பொறுப்பு) ஏதும் வழங்கப்படக்கூடாது.

2 புல எல்லை அளத்தல் (Pointing out F-Line) பணிக்கு இவர்களை பயன்படுத்தக்கூடாது.

புல எல்லை அளவுப்பணி மிகவும் நுன்உணர்வு மிக்க பணி என்பதாலும், நில அளவை எல்லைகளை குறித்த சட்டம் 1923ன் சட்டபிரிவுக்கு உட்பட்டவை என்பதாலும், முழுநேர அரசு அலுவலர்களை நிரந்தரப் பணியில் உள்ள நிலஅளவை பணியாளர்களைக் கொண்டு மட்டுமே செயல்படுத்தப்பட வேண்டும்.

3 வட்ட அலுவலகங்களில் நிலுவைக் கோப்புகள் பணிகளுக்கு அனுப்பப்படும் போது, மேற்படி நபர்களை எக்காரணம் கொண்டும், நீதிமன்ற ஆணையம் தொடர்பான கோப்புகளை நில அளவை செய்ய அனுமதிக்கக் கூடாது.

4 வட்ட அலுவலகஙகளில் அரசு நிலங்களில் ஆக்கிரமிப்பு அகற்றுதல் தொடர்பான நுண்உணர்வு மிக்க அளவுப்பணியில் இவர்களை பணியமர்த்தல் கூடாது. இவர்களது பணியில் குறைபாடுகள் ஏற்பட்டு நீதிமன்றம் செல்லும் நிலை ஏற்பட்டால் மேற்படி தனியர்களின் பணிக்காக நீதிமன்றம் செய்லும் நிலை அந்த உயர் அலுவலர்களுக்கே ஏற்படும். எனவே, அவ்வாறான பணிகளில் இவர்களை ஈடுபடுத்துவதை தவிர்க்க வேண்டும்

தற்போது இம்மாநகராட்சியில் தெற்கு மற்றும் மத்தியம் ஆகிய மண்டலங்களில் நகரசார் ஆய்வாளர் பணியிடங்கள் காலியாக உள்ளது. தனியர் துணை ஆய்வாளர் நிலையில் பணியாற்றி 31.08.2012 அன்று ஒய்வு பெற்றுள்ளார். ஒய்வு பெற்று 5 ஆண்டுகள் கடந்து 63 வயது ஆகிவிட்ட நிலையில் தற்போது கோயம்புத்தூர் மாநகராட்சியில் நகர்சார் ஆய்வாளராக மறுநியமனம் கோரியுள்ளார்.

எனவே பார்வை 4ல் காணும் மாவட்ட ஆட்சியர், கோயம்புத்தூர் அவர்களின் கடிதத்தில் மாநகராட்சியில், அத்தியாவசிய தேவை இருப்பின் அதன் அடிப்படையில் ஒய்வு பெற்ற பணியாளரை ஒப்பந்த அடிப்படையில் நியமனம் செய்து கொள்ள ஆணையாளரே உத்திரவு பிறப்பித்து கொள்ளும்படி தெரிவிக்கப்பட்டுள்ளதால் தமிழ்நாடு ஒய்வூதிய விதி 44ன்படி ஒப்பந்த அடிப்படையில் உத்திரவு பிறப்பிக்கப்பட்ட நாளிலிருந்து ஒரு வருட காலத்திற்கு மாதம் ஒன்றிற்கு ரூ.10,800/– வீதம் நிர்ணயம் செய்து மேற்குறிப்பிட்ட நிபந்தனைகள் மற்றும் பார்வை 5ல் காணும் அரசு ஆணையில் குறிப்பிட்டுள்ள நிபந்தனைகளின் பேரில் இவரை இம்மாநகராட்சி தெற்கு மண்டல அலுவலகத்தில் நகர சார் ஆய்வாளர் பதவியில் மறுநியமனம் செய்ய அனுமதி வேண்டி மன்றத்திற்குப் பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு – அனுமதிக்கலாம் ந.க.எண். 5613/2017/எம்.சி.2

**மாநகர மன்ற தீர்மானம் எண் 211 நாள் 17.08.2017**

அனுமதிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 9

பொருள்:- கோயம்புத்தூர் மாநகராட்சி பொது சுகாதாரம் - துப்புரவு பணியாளர்களுக்கு 2017-18ம் ஆண்டிற்கான சீருடைகள் வாங்கி வழங்குதல் - தொடர்பாக.

--------

அரசாணை எண் (2டி) எண் 37 நாள் 14.05.1999 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்குதுறை உத்தரவுப்படி கோயம்புத்தூர் மாநகராட்சி பொது சுகாதாரப்பிரிவில் பணிபுரியும் துப்புரவுபணியாளர்களுக்கு ஒவ்வொரு ஆண்டும், ஆண்துப்புரவு பணியாளர்களுக்கு இரண்டு ஜோடி சீருடைகளும், ஒரு ஜோடி காலணியும், ஒரு தலைப்பாகையும், பெண் துப்புரவு பணியாளர்களுக்கு இரண்டு பாலிஸ்டர் புடவையும், இரண்டு ஜாக்கெட்டுகளும், 1 ஜோடி காலணியும் மற்றும் ஒரு தலைப்பாகை துணியும் மாநகராட்சி நிதியிலிருந்து வழங்கப்பட்டு வருகிறது. ஒரு ஜோடி சீருடை தீபாவளிப்பண்டிகைக்கும் மற்றொரு ஜோடி சீருடை பொங்கல் பண்டிகையின் போதும் வழங்கப்பட்டு வருகிறது.

அரசாணை (வாலாயம்) எண் 393 நாள் 16.09.1997 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்குதுறை (மா.ந.2) உத்தரவுப்படி, மலேரியா ஒழிப்புத்திட்ட பணியாளர்களுக்கு 2 ஜோடி முழுக்கால் சட்டை, 2 ஜோடி அரைக்கை சட்டை, காலணி ஆகியன வழங்கப்பட்டு வருகிறது.

கோயம்புத்தூர் மாநகராட்சி மாமன்ற தீர்மான எண் 87, நாள் 30.09.2009-ன் படி அனைத்து துப்புரவு பணியாளர்களுக்கும் முழுக்கால் சட்டை வழங்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அரசாணை எண் 50 கைத்தறி, காதி (டி4) டிபார்ட்மெண்ட் நாள் 10.03.1995ன்படி அரசுத்துறை நிறுவனங்களான கோ-ஆப்டெக்ஸ், தமிழ்நாடு டெக்ஸ்டைல்ஸ், தேசிய பஞ்சாலைக்கழகம் ஆகிய நிறுவனங்களிடமிருந்து இவ்வகை சீருடைகள் நேரிடையாக கொள்முதல் செய்யப்பட்டு வருகிறது.

அரசாணையின்படி ஆண்துப்புரவு பணியாளர்களுக்கு 1 செட் சீருடைக்கு தையற்கூலி ரூ.100/-, பெண் துப்புரவு பணியாளர்களுக்கு 1 ஜாக்கெட் தையற்கூலி ரூ. 20-ம் மாநகராட்சி நிதியிலிருந்து வழங்கப்பட்டு வந்தது. மாமன்ற தீர்மான எண் 87, நாள் 30.09.2009-ன்படி ஆண் பணியாளர்களுக்கு 1 செட் சீருடைக்கு தையற்கூலி ரூ. 200-ம் மற்றும் பெண் துப்புரவு பணியாளர்களுக்கு 1 ஜாக்கெட் தையற்கூலி ரூ.40-ம் வழங்க தீர்மானிக்கப்பட்டு வழங்கப்பட்டுள்ளது. தற்போது சுகாதாரநிலைக்குழு தீர்மான எண் 33 நாள் 10.10.2013-ன்படி ஆண் துப்புரவு பணியாளர்களுக்கு தையற்கூலி ரூ.450/- மற்றும் பெண் துப்புரவு பணியாளர்களுக்கு ரூ.100/-ம் வழங்கப்பட்டுவருகிறது.

சென்ற 2016-17-ம் ஆண்டு தையற்கூலி செலவினம் ரூ.17,87,000/-யும், சீருடைகள் வாங்கி வழங்க ரூ.27,76,760/-யும் மற்றும் காலணிகளுக்கு ரூ.5,42,760/-யும் ஆகமொத்தம் ரூ. 51,06,520/- செலவாகியுள்ளது.

இவ்வாண்டு சீருடைகள் வாங்குவதற்கு ரூ.50.86 லட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. பார்வை 6-ல் காணும் ஆணையாளர் மற்றம் தனி அதிகாரி அவர்களின் உத்தரவின்படி 2017-18-ம் ஆண்டிற்கான சீருடைகளை கோ-ஆப்டெக்ஸ் நிறுவனத்தாரிடம் (தமிழ்நாடு கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கம் லிமிடெட்) கொள்முதல் செய்ய அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அதன்படி மண்டல துப்புரவு அலுவலர்களிடமிருந்து பெறப்பட்ட பட்டியலின்படி மாநகராட்சியில் தற்போது பணிபுரியும் துப்புரவு பணியாளர்கள் மொத்தம் **2657** நபர்களுக்கு 2017-18-ம் ஆண்டிற்கு 2 ஜோடி சீருடைகள், தலைப்பாகைகளை கோ ஆப்டெக்ஸ் நிறுவனத்தாரிடமும் மற்றும் காலணிகளை கதர் கிராமத் தொழில்கள் (காதி கிராப்ட்) ஆகிய அரசுத்துறை நிறுவனங்களிடமிருந்து ரூ. 50.86 இலட்சத்திற்குள் வாங்கி வழங்கலாம்.

அரசுத்துறை நிறுவனங்களான கோ ஆப்டெக்ஸ் மற்றும் காதி கிராப்ட் (கதர் கிராமத் தொழில்கள் ) நிறுவனத்தாரிடம் விலைப்புள்ளிகள் பெறப்பட்டு சீருடைகளுக்கான உத்தேச செலவினத்தொகை கணக்கீடு செய்யப்பட்டுள்ளது. அதன் விவரங்கள் கீழ்கண்டவாறு சமர்ப்பிக்கப்படுகிறது.

**கோ ஆப் டெக்ஸ் நிறுவனம் (தமிழ்நாடு கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கம் லிமிடெட்)**

| துணி வகை | பணியாளர் களின் எண்ணிக்கை | ஒரு நபருக்கு தேவையான அளவு | மொத்த துணி | விலை மீட்டருக்கு ரூபாய் | மொத்த விலை ரூபாய் |
|---|---|---|---|---|---|
| காக்கி பாலியஸ்டர் சட்டை & பேண்ட் | 1725 | 3.25 மீட்டர் | 5607 மீட்டர்கள் | 126.00 | 7,06,482.00 |
| ஜாக்கெட்டுடன் கூடிய நீலநிற கறை வைத்த புடவை | 932 | ஒரு புடவை | 932 புடவைகள் | 380.00 | 3,54,160.00 |
| துண்டுகள் (தலைப் பாகை) | 2657 | ஒரு துண்டு | 2657 துண்டுகள் | 120.00 | 3,18,840.00 |
| | | | மொத்தம் ரூபாய் | | 13,79,482.00 (GST வரிகள் தனி) |

**காதி நிறுவனத்தார் (கதர் கிராமத் தொழில்கள்)**

| வகை | பணியாளர்களின் எண்ணிக்கை | ஒரு நபருக்கு தேவையான அளவு | மொத்தம் | விலை | மொத்த விலை |
|---|---|---|---|---|---|
| ஆண்கள் காலணி | 1725 | 1 ஜோடி | 1725 | 242.00 | 4,17,450.00 |
| பெண்கள் காலணி | 932 | 1 ஜோடி | 932 | 210.00 | 1,95,720.00 |
| | | | மொத்த விலை ரூபாய் | | 6,13,170.00 (GST வரிகள் தனி) |

| | | |
|---|---|---|
| ஆக மொத்தம் சீருடைகள் | - | ரூ. 13,79,482.00 |
| காலணிகள் | - | ரூ. 6,13,170.00 |
| | | ------------------------- |
| | | ரூ. 19,92,652.00 |
| | | ------------------------- |

இவ்வாண்டு ஆண் துப்புரவு பணியாளா்களுக்கு ஒரு ஜோடி சீருடைக்கு தையற்கூலி ரூ. 450/- மற்றும் பெண் துப்புரவு பணியாளா்களுக்கு ஒரு ஜாக்கெட் தைக்க ரூ. 100/- –ம் வழங்கப்படுகிறது. (வருடத்திற்கு இரண்டு முறை)அதன்படி இவ்வாண்டு தீபாவளி பண்டிகையை முன்னிட்டு தற்போது வழங்கப்படவுள்ள சீருடைகளுக்கு தையற்கூலியாக

| | | | |
|---|---|---|---|
| ஆண் துப்புரவு பணியாளா்கள் | 1725 x 450 | = | 7,76,250.00 |
| பெண் துப்புரவு பணியாளா்கள் | 932 x 100 | = | 93,200.00 |
| | | | ------------------- |
| | மொத்தம் ரூ. | | 8,69,450.00 |
| | | | ------------------- |

ஆக மொத்தம் 19,92,652.00 /- + 8,69,450/- = 28,62,102/-(GST வரிகள் தனி) செலவில் தி.ள். கோஆப்டெக்ஸ் நிறுவனத்தாா் மற்றும் தி/ள். தமிழ்நாடு கதா் கிராமத் தொழில் வாரியம் (காதி கிராப்ட்) ஆகிய அரசுத்துறை நிறுவனங்களிடம் 2017-18-ம் ஆண்டிற்கு தீபாவளிப்பண்டிகையை முன்னிட்டு முதற்கட்டமாக ஒரு செட் சீருடை, காலணிகள் மற்றும் தையற்கூலியை வாங்கி வழங்கவும், இரண்டாம் கட்டமாக பொங்கல் பண்டிகையின் போது மேற்படி நிறுவனத்தாரிடம் சீருடைகளை இதே விலைப்புள்ளிகளின் அடிப்படையில் வாங்கி வழங்கவும் மற்றும் சீருடைகளுக்கான தையற்கூலி தொகையை அந்தந்த மண்டல உதவி ஆணையா்களின் கணக்கில் செலுத்தி துப்புரவு பணியாளா்களுக்கு அவரவா் வங்கிக் கணக்கில் ECS –ல் செலுத்தவும் மன்றத்தின் அனுமதி வேண்டி பொருள் சமா்ப்பிக்கப்படகிறது.

அலுவலகக் குறிப்பு : - ஒப்புதல் அளிக்கலாம். ந.க.எண்: 2520 /2017/எம்.இ.4

**மாநகர மன்ற தீர்மானம் எண் 212 நாள் 17.08.2017**

ஒப்புதல் அளிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 10

பொருள்: கோயம்புத்தூர் மாநகராட்சிப் பகுதிகளில் பாதாள சாக்கடை பணிகள் மற்றும் குடிநீர் மேம்பாட்டுப் பணிகளால் சேதம் அடைந்த சாலைகளை சீரமைப்பு செய்வதற்காக தமிழ்நாடு நகர்புற சாலை உட்கட்டமைப்பு திட்டம் (TURIP) (2017-18) -ன் கீழ் ரூ.**4000.00** இலட்சத்திற்கு கீழ்கண்ட பட்டியலில் உள்ளவாறு மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டுள்ளது.

| சிப்பம் 1 | | | | | |
|---|---|---|---|---|---|
| வரிசை எண் | வார்டு எண் | பணியின் பெயர் | நீளம் (கி.மீ) | அகலம் (மீ) | மதிப்பீட்டுத் தொகை (ரூபாய் இலட்சத்தில்) |
| 1 | 38, 40, 41, 47 | வார்டு எண்.**41** க்குட்பட்ட திருவள்ளுவர் நகர், SRV நகர் , காந்தி மாநகர், அசோக்நகர் பிரதான சாலை, காந்தி மாநகர் குடிநீர் வடிகால் வாரிய சாலை, வார்டு எண்.**47** க்குட்பட்ட மருதய்யா நகர், வேலவன் நகர் மற்றும் கட்டபொம்மன் வீதி , வார்டு எண்.**38**க்குட்பட்ட AD காலனி, V.O.C காலனி, ரஙகாவிலாஸ் நகர் , விஜய ஸ்ரீ கார்டன், மற்றும் விளாங்குறிச்சி சாலையில் காந்தி மாநகர் சந்திப்பு முதல் மின்மயானம் வரை உள்ள பகுதிகள் வார்டு எண்.**40**க்குட்பட்ட வரதராஜுலு நகர், விஜி ராவ் நகர் , மகாத்மா காந்தி நகர் மற்றும் சிந்தாமணிநகர் ஆகிய பகுதிகளில் மறுதார் தளம் அமைத்தல். | 8.33 | 94.00 | 564.00 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| சிப்பம் 2 | | | | | |
| 2 | 5, 6, 7, 16 | வார்டு எண்.5 க்குட்பட்ட TVS நகர் சாலை முதல் சரவணநகர் இணைப்பு சாலை வரை மற்றும் வார்டு எண்.6க்குட்பட்ட வள்ளி நகர், வித்யா காலனி, ரஙகா ரெசிடென்சி, வார்டு எண்.7க்குட்பட்ட அண்ணா நகர், லக்ஷ்மிநகர், தேவாஙகா நகர், வார்டு எண்.16க்குட்பட்ட ஸ்ரீ ராம் அவென்யூ மெயின் ரோடு விஸ்தரிப்பு மற்றும் குறுக்கு சாலை, சூப்பர் கார்டன் குறுக்கு சாலை, சூப்பர் கார்டன் பிரதான சாலை மற்றும் கோபாலபுரம் முதல் ஈ.பி. காலனி ரோடு ஆகிய பகுதிகளில் மறுதார் தளம் அமைத்தல். | 9.66 | 42.00 | 555.00 |
| சிப்பம் 3 | | | | | |
| 3 | 16 | வார்டு எண்.16க்குட்பட்ட கோபாலபுரம் மெயின் ரோடு , கோபாலபுரம் குறுக்கு சாலை, ஜெய்கிருஷ்ணா லே–அவுட் மெயின் ரோடு , ஜெய்கிருஷ்ணா லே–அவுட் குறுக்கு சாலை , ராஜன் நகர், பெரியார் நகர் மற்றும் மருதம் நகர், மெயின் ரோடு மற்றும் குறுக்கு சாலை, சி.எஸ்.நகர் மெயின் ரோடு மற்றும் குறுக்கு சாலை, வி.ஒ.சி. நகர், ராமலிஙகாபுரம் மெயின் ரோடு மற்றும் குறுக்கு சாலை, திருவள்ளுவர் நகர் மற்றும் மாசாணி அம்மன் நகர் மெயின் ரோடு, திருவள்ளுவர் நகர் குறுக்கு சாலை ஆகிய பகுதிகளில் மறுதார் தளம் அமைத்தல். | 10.09 | 44.00 | 636.00 |
| சிப்பம் 4 | | | | | |
| 4 | 17, 18, 19 | வார்டு எண் 17க்குட்பட்ட மாதவி நகர் மெயின் ரோடு மற்றும் குறுக்கு சாலை, பாலாஜி நகர் மெயின் ரோடு மற்றும் குறுக்கு சாலை, வார்டு எண்.18க்குட்பட்ட சுப்பய கவுண்டர் வீதி மெயின் ரோடு மற்றும் குறுக்கு சாலை, ஒ.எம். கணேஷ் நகர் மெயின் ரோடு மற்றும் குறுக்கு சாலை, காமராஜர் வீதி மெயின் ரோடு மற்றும் குறுக்கு சாலை , வார்டு எண்.19க்குட்பட்ட பெரிய தோட்டம் காலனி மெயின் ரோடு, பெரிய தோட்டம் காலனி குறுக்கு சாலை, பொங்காலியூர் மெயின் ரோடு பகுதியில் மறுதார் தளம் அமைத்தல் | 9.25 | 41.00 | 600.00 |
| சிப்பம் 5 | | | | | |
| 5 | 88, 89, 92, 93, 76, 77, 50, 80, 58 | வார்டு எண்.88க்குட்பட்ட சோழன் நகர், வார்டு எண்.89க்குட்பட்ட இந்தியன் பேஙக் காலனி, ஆதிவிராவிடர் காலனி, அண்ணா நகர், ராதாராம் நகர், மற்றும் பள்ளி வீதி வார்டு எண்.92 மற்றும் 93 க்குட்பட்ட நரசிம்ம புரம், பி.கே.புதூர் மற்றும் அண்ணா நகர், அண்ண மாணிக்கர் வீதி, ரஙகசாமி நாயுடு நகர், வார்டுஎண்.76க்குட்பட்ட சுப்ரமணிய உடையார் வீதி வார்டு எண்.77க்குட்பட்ட ராமமூர்த்தி சாலை வார்டு எண்.50க்குட்பட்ட ஹட்கோ காலனி மெயின் ரோடு மற்றும் குறுக்கு சாலை 1–8, மேற்கு பவர் ஹவுஸ் சாலை , வார்டு எண்.80க்குட்பட்ட சுக்ரவார் பேட்டை முதல் தியாகி குமரன் வீதி மேற்கு முடிவு வரை சாலை வார்டு எண்.58க்குட்பட்ட தட்டச்சன் தோட்டம் சந்திப்பு முதல் நீலிக்கோணாம்பாளையம் பேருந்து நிலையம் வரை ஆகிய பகுதிகளில் மறுதார் தளம் அமைத்தல் | 10.70 | 70.50 | 535.00 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| சிப்பம் 6 | | | | | |
| 6 | 32, 56, 57 | வார்டு எண்.32க்குட்பட்ட காமராஜ் அவென்யூ, ஸ்ரீ நகர், குமுதன் நகர் வார்டு எண்.56க்குட்பட்ட சவுரிபாளையம் பிரதான சாலையில் அவினாசி சாலை முதல் பி.எஸ்.ஜி ஹாஸ்பிடல் வரை, சவுரிபாளையம் பிரதான சாலையில் பி.எஸ்.ஜி ஹாஸ்பிடல் முதல் காவிட்டி நாயூடு சந்திப்பு வரை, வார்டு எண்.57க்குட்பட்ட G.V.ரெசிடென்சி பிரதான சாலையில் தெற்கு முதல் வடக்கு செல்லும் முதல் சாலை, G.V.ரெசிடென்சி பிரதான சாலையில் தெற்கு முதல் வடக்கு செல்லும் 2வது சாலை, G.V.ரெசிடென்சி பிரதான குறுக்கு சாலை 2, G.V.ரெசிடென்சி பிரதான குறுக்கு சாலை 1 ஆகிய பகுதிகளில் மறுதார் தளம் அமைத்தல் | 7.45 | 55.00 | 593.00 |
| சிப்பம் 7 | | | | | |
| 7 | 56, 58, 59, 61, 63, 75, 59 | வார்டு எண்.56க்குட்பட்ட பீளமேடு புதூர் ஆர்.கே. காலனி மெயின் ரோடு, வார்டு எண்.58க்குட்பட்ட RVL சந்திப்பு முதல் விஜயலக்ஷமி நகர் சந்திப்பு வரை , விஜயலக்ஷமி நகர் சந்திப்பு முதல் தாமோதரசாமி லேஅவுட் சந்திப்பு வரை, வார்டு எண்.59க்குட்பட்ட வசந்தா மில் சந்திப்பு முதல் நீலிக்கோணாம்பாளையம் வரை, வார்டு எண்.61க்குட்பட்ட பட்டணம் இட்டெரி சாலையில் வார்டு எண்.63க்குட்பட்ட கள்ளிமடை பகுதி, வார்டு எண்.75க்குட்பட்ட சாரமேடு பகுதி, மற்றும் வார்டு எண்.59க்குட்பட்ட சக்தி நகர் மற்றும் சின்னசாமி லேஅவுட் ஆகிய பகுதிகளில் மறுதார் தளம் அமைத்தல் | 6.93 | 49.50 | 517.00 |

| வ.எண் | சிப்பம் எண் | நீளம் (கி.மீ) | அகலம் (மீ) | மதிப்பீட்டுத் தொகை (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|---|---|
| 1 | சிப்பம் 1 | 8.33 | 94.00 | 564 |
| 2 | சிப்பம் 2 | 9.66 | 42.00 | 555 |
| 3 | சிப்பம் 3 | 10.09 | 44.00 | 636 |
| 4 | சிப்பம் 4 | 9.25 | 41.00 | 600 |
| 5 | சிப்பம் 5 | 10.7 | 70.50 | 535 |
| 6 | சிப்பம் 6 | 7.45 | 55.00 | 593 |
| 7 | சிப்பம் 7 | 6.93 | 49.50 | 517 |
| | மொத்தம் | 62.41 | 396 | 4000 |

மேற்கண்ட பகுதிகளில் குறிப்பிடப்பட்டுள்ள சாலைகளை சீரமைப்பு செய்வதற்காக தமிழ்நாடு நகர்புற சாலை உட்கட்டமைப்பு திட்டம் (TURIP) (2017-18) -ன் கீழ் மதிப்பீடு ரூ.4000.00 இலட்சத்திற்கு அரசின் நிதி ஒதுக்கீடு, நிர்வாக அனுமதி மற்றும் தொழில்நுட்ப அனுமதி வேண்டி நகராட்சி நிர்வாக ஆணையரகத்திற்கு அனுப்பிவைப்பதற்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு: அனுமதிக்கலாம் ந.க.எண். 7369 /2017/எம்டி3

**மாநகர மன்ற தீர்மானம் எண் 213 நாள் 17.08.2017**

அனுமதிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 11

பொருள் : கோயம்புத்தூர் மாநகராட்சி - வடக்கு மண்டலம் - சரவணம்பட்டி பகுதியில் AMRUT திட்டத்தின் கீழ் குடிநீர் மேல்நிலை தொட்டி கட்டுவதற்கு மாற்று இடம் தேர்வு செய்து அனுமதி வேண்டுவது – தொடர்பாக.

பார்வை : 1. மாமன்ற தீர்மான எண் 401 நாள் 26-2-2016.
2. நீதிப்பேராணை மனு எண் 1521/ 2017 நாள் 15-03-2017 (தடை உத்தரவு)
3. தமிழ் நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் கடித ந.க. எண். 226/ கோ.பொது/இவஅ2/2017 நாள் 22-02-2017
4. தமிழ் நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் கடித ந.க. எண். 225-1/ கோ.பொது/இவஅ2/2017 நாள் 03-05-2017
5. ஜெயா நகர் மற்றும் 6 குடியிருப்போர் நலச்சங்கம் மற்றும் ஊர் பொது மக்கள் கடிதம் நாள் 12-05-2017

************

கோயம்புத்தூர் மாநகராட்சி – வடக்கு மண்டலம் - வார்டு எண் 31 சரவணம்பட்டி பகுதிக்குட்பட்ட க.ச.எண் 124 அமைந்துள்ள மார்வெல் பாரம்பரியம் குடியிருப்பில், மத்திய அரசின் AMRUT (Atal Mission for Rejuvenation and Urban Transformation) நகர்புறங்களை மேம்படுத்தும் திட்டத்தின் கீழ முதற்கட்டமாக கோயம்புத்தூர் மாநகராட்சியில் புதிதாக இணைக்கப்பட்ட பகுதிகளில் குடிநீர் வினியோகத்தினை மேம்படுத்த மார்வெல் பாரம்பரியத்தில் 7.50 லட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்ட குடிநீர் மேல் நிலைத் தொட்டி அமைக்க பார்வை 1ல் காண் மாமன்ற தீர்மான எண் 401 நாள் 26-2-2016-ல் மாமன்றத்தின் அனுமதி பெற்று கட்டும் பணிகள் மேற்கொண்ட போது, குடியிருப்போர் ஆட்சேபனை தெரிவித்து குடியிருப்போர் சார்பாக திரு. K. சுப்பையன் என்பவர் பார்வை 2ல் காண் சென்னை உயர் நீதி மன்ற நீதிப்பேராணை மனு எண் 1521/ 2017 என்கின்ற வழக்கு தொடரப்பட்டு 15-03-2017 அன்று வழக்கு இடத்தில் எவ்விதமான கட்டுமான பணிகளும் மேற்கொள்ள நீதிமன்றத்தால் இடைக்கால தடை விதிக்கப்பட்டு 8 வார கால அவகாசத்திற்குள் எதிர் வாதம் தாக்கல் செய்ய அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இதன் பொருட்டு மத்திய அரசின் திட்டத்தின் கீழ் நிதி உதவியுடன் செய்யப்படும் பணிகள் கால தாமதமின்றி செய்து முடிக்க தமிழ் நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் பார்வை 3 மற்றும் 4 காண் கடிதங்களில், சென்னை உயர் நீதி மன்றத்தின் தடை உத்தரவை கவனத்தில் கொண்டு மேல் நிலை தொட்டி கட்டுவதற்கு தேர்வு செய்யப்பட்டிருந்த மார்வெல் பாரம்பரியம் பகுதிக்கு பதிலாக தகுந்த வேறு மாற்று இடம் தேர்வு செய்த பிறகு மண் பரிசோதனை மற்றும் இதர கட்டுமான பணிகள் துவங்கப்படும் என தெரிவிக்கப்பட்டிருந்தது.

இந்நிலையில், வார்டு எண் 28 சரவணம்பட்டி பகுதியில் மார்வெல் பாரம்பரியம் லே அவுட் பகுதிக்கு அருகாமையில் அமைந்துள்ள ஜெயா நகர், K.G. லே அவுட், மகா நகர், மாருதி அவென்யு, பாலமுருகன் நகர், திருவண்ணாமலை நகர் மற்றும் சிவ இளங்கோ நகர் குடியிருப்போர் நலச்சங்கம் மற்றும் ஊர் பொது மக்கள் சார்பாக மேல் நிலை தொட்டி கட்டி தருமாறு கோரி பார்வை 5ல் காண் மனு கொடுக்கப்பட்டுள்ளது.

எனவே, ஏற்கனவே வார்டு எண் 31, சரவணம்பட்டி கிராமம், மார்வெல் பாரம்பரியம் இடத்தில் மேல் நிலை தொட்டி கட்டுவதற்கு மாற்றாக வார்டு எண் 28, க.ச. எண். 121, 122, 124/1 - ல், ஜெயா நகர் பகுதியில் உள்ள இடத்தில் மேல் நிலைத் தொட்டி கட்டுவதற்கு அனுமதி வேண்டி மாமன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு : அனுமதிக்கலாம் ந.க.எண்.004370/2017/ டி2 (வ)

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 214 நாள் 17.08.2017</u>**

அனுமதிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 12

பொருள்:- கோயம்புத்தூர் மாநகராட்சி – பொது கணக்குப் பிரிவு – தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சித் திட்டம் – சாலையமைக்கும் பணிக்கு கடன் வழங்கியது – வட்டி விகிதம் 8.34லிருந்து 6.25ஆக குறைத்து குடிநீர் மற்றும் சுகாதார கூட்டு நிதியின் மூலமாக மறுகடன் பெறுவது – தொடர்பாக.

பார்வை:- குடிநீர் மற்றும் சுகாதார கூட்டு நிதி அவர்களின் கடிதம் WSPF/SMIF-TN-II-2/ULB/Loan/2014/19 நாள்.22.05.2017

----------

தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சித் திட்டம் மூன்றின் கீழ் தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சி நிதியமானது கோயம்புத்தூர் மாநகராட்சியால் மேற்கொண்ட சிறப்பு சாலை திட்டத்தினை நிறைவேற்றுவதற்காக ரூ.3556 இலட்சங்கள் கடன் வழங்கியுள்ளது. இதன் வட்டி விகிதம் 8.34% ஆகும். மாமன்றம் தனது தீர்மான எண்.160 நாள்.29.08.13ன் வாயிலாக இந்த கடனுக்குரிய நிபந்தனைகளை ஏற்றுக் கொண்டுள்ளது.

தற்போது ஜெர்மானிய நிதி நிறுவனத்தின் நிதியுதவி பெற்ற நீடித்த கட்டமைப்பிற்கான நிதியுதவி / தமிழ்நாடு 2 என்னும் திட்டத்தின் கீழ் கடன் பத்திரஙகளை வெளியிட்டு நிதி திரட்டுவதற்காக குடிநீர் மற்றும் சுகாதார கூட்டு நிதியம் முடிவு செய்துள்ளது. மூலதனச் சந்தையிலிருந்து நிதி திரட்டப்பட்டவுடன் சுகாதார கூட்டு நிதியத்தின் மூலமாக கோயம்புத்தூர் மாநகராட்சிக்குரூ.3163.69 இலட்சம் வழஙகவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது. இதனுடைய வட்டி விகிதம் சுமார் 6.25% ஆகும். இது ஏற்கனவே மாநகராட்சி பெற்றுள்ள வட்டி விகிதமான 8.34% சதவீதத்தைவிட குறைவாகும். இந்த கடன் பத்திர வெளியீட்டில் கோயம்புத்தூர் மாநகராட்சி பங்குத் தொகை பெற்று மறு கடன் பெறுவதன் மூலம் கடன் பெற்ற நாள் முதல் ஓராண்டு வரை அசல் திருப்பி செலுத்த வேண்டியதில்லை. மேலும் கடன் திருப்பி செலுத்த வேண்டிய கால அவகாசம் எட்டு ஆண்டுகள் ஆகும்.

மேற்கண்டவற்றின் அடிப்படையில் கீழ்க்கண்ட தீர்மானங்களை இந்த மாமன்றம் நிறைவேற்ற வேண்டியுள்ளது.

குடிநீர் மற்றும் சுகாதார கூட்டு நிதியம் வழங்கும் கடன் பெறவும், இந்த மாநகராட்சிக்கு என்று ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதியளவினை முழுமையாக பயன்படுத்திக் கொள்ளவும், இது தொடர்பாக தமிழக அரசு மற்றும் குடிநீர் மற்றும் சுகாதார கூட்டு நிதியம் ஆகியவை நிர்ணயித்துள்ள விதிமுறைகளை முழுமையாக பின்பற்றவும் மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு:- அனுமதிக்கலாம் ந.க.எண். 5193/2015/பி1

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 215 நாள் 17.08.2017</u>**

அனுமதிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 13

பொருள் : ஸ்மார்ட் சிட்டி திட்டத்தின் கீழ் கோயம்புத்தூர் மாநகராட்சி பகுதிக்குட்பட்ட எட்டு குளங்களிலுள்ள ஆகாயத்தாமனை மற்றும் முட்புதர்களை அகற்றும் பணிகள் மேற்கொள்ள ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டது – குறைந்த ஒப்பந்தப்புள்ளி வழங்கிய நிறுவனங்களை தேர்ந்தெடுக்க மாமன்றப்பொருள் சமர்பித்தல் – தொடர்பாக.

-----------------------------

கோயம்புத்தூர் ஸ்மார்ட் சிட்டி திட்டத்தின் கீழ் மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் அமைந்துள்ள 8 குளங்களிலுள்ள ஆகாயத்தாமரை மற்றும் முட்புதர்களை அகற்றும் பணிகளுக்கு நிர்வாக அனுமதி கடந்த 12.06.2017– ல் வழங்கப்பட்டது.

இப்பணிகளுக்கு கடந்த 21.07.2017–ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் எல்லா பணிகளுக்கும் மூன்று நிறுவனங்கள் கலந்து கொண்டு ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ளது. இதில் ஒவ்வொரு பணிக்கும் இரு நிறுவனங்கள் தொழில் நுட்ப தகுதி பெற்றதால் கடந்த 04.08.2017–ந் தேதியில் விலைப்புள்ளிகள் திறக்கப்பட்டது.

(தொகை ரூபாயில்)

| வ. எண் | பணியின் பெயர் | ஒப்பந்தப்புள்ளி கோரிய தொகை ரூபாயில் | ஒப்பந்ததாரரின் பெயர் | ஒப்பந்தப் புள்ளி வழங்கிய தொகை | சதவீதம் |
|---|---|---|---|---|---|
| 1 | கோயம்புத்தூர் மாநகராட்சிக்குட்பட்ட வாலாங்குளத்தில் ஆகாயத்தாமரை மற்றும் முட்புதர்கள் அகற்றும் பணி<br>கோ. எ.5301/ 2017/ JN4 | 6179691.54 | 1. தி/ள். கேசிபி இன்ஜினியர்ஸ் பிரைவேட் லிமிடெட், சென்னை. | 6488357.60 | 4.99 % கூடுதல் (விலை குறைப்பிற்கு பின்) |
| | | | 2. தி/ள். வரதான் இன்ஃப்ரா ஸ்ட்ரக்சர், கோயம்புத்தூர். | 6513565.98 | 5.40 % |
| 2 | கோயம்புத்தூர் மாநகராட்சிக்குட்பட்ட பெரியகுளத்தில் ஆகாயத்தாமரை மற்றும் முட்புதர்கள் அகற்றும் பணி<br>கோ. எ.5302/ 2017/ JN4 | 6162055.60 | 1. தி/ள். கேசிபி இன்ஜினியர்ஸ் பிரைவேட் லிமிடெட், சென்னை. | 6547117.26 | 6.25 % |
| | | | 2. தி/ள். கன்ஸ்ட்ரானிக்ஸ் இண்டியா, சென்னை. | 6468643.63 | 4.98 % கூடுதல் (விலை குறைப்பிற்கு பின்) |
| 3 | கோயம்புத்தூர் மாநகராட்சிக்குட்பட்ட செல்வம்பதி குளத்தில் ஆகாயத்தாமரை மற்றும் முட்புதர்கள் அகற்றும் பணி<br>கோ. எ.5303/ 2017/ JN4 | 4174011.66 | 1. தி/ள். வரதான் இன்ஃப்ரா ஸ்ட்ரக்சர், கோயம்புத்தூர். | 4381683.98 | 4.98 % கூடுதல் (விலை குறைப்பிற்கு பின்) |
| | | | 2. தி/ள். கன்ஸ்ட்ரானிக்ஸ் இண்டியா, சென்னை. | 4392690.36 | 5.24 % |
| 4 | கோயம்புத்தூர் மாநகராட்சிக்குட்பட்ட சிங்காநல்லூர் குளத்தில் ஆகாயத்தாமரை மற்றும் முட்புதர்கள் அகற்றும் பணி<br>கோ. எ.5304/ 2017/ JN4 | 2791034.27 | 1. தி/ள். கேசிபி இன்ஜினியர்ஸ் பிரைவேட் லிமிடெட், சென்னை. | 2970482.86 | 6.43 % |
| | | | 2. தி/ள். கன்ஸ்ட்ரானிக்ஸ் இண்டியா, சென்னை. | 2929890.94 | 4.98 % கூடுதல் (விலை குறைப்பிற்கு பின்) |
| 5 | கோயம்புத்தூர் மாநகராட்சிக்குட்பட்ட குமாராசாமி குளத்தில் ஆகாயத்தாமரை மற்றும் முட்புதர்கள் அகற்றும் பணி<br>கோ. எ.5305/ 2017/ JN4 | 5498082.06 | 1. தி/ள். வரதான் இன்ஃப்ரா ஸ்ட்ரக்சர், கோயம்புத்தூர். | 5772292.75 | 4.99 % கூடுதல் (விலை குறைப்பிற்கு பின்) |
| | | | 1. தி/ள். கேசிபி இன்ஜினியர்ஸ் பிரைவேட் லிமிடெட், சென்னை. | 5892995.13 | 7.18 % |
| 6 | கோயம்புத்தூர் மாநகராட்சிக்குட்பட்ட நரசம்பதி குளத்தில் ஆகாயத்தாமரை மற்றும் முட்புதர்கள் அகற்றும் பணி<br>கோ. எ.5306/ 2017/ JN4 | 6176719.93 | 1. தி/ள். கேசிபி இன்ஜினியர்ஸ் பிரைவேட் லிமிடெட், சென்னை. | 6441402.50 | 4.29 % கூடுதல் (விலை குறைப்பிற்கு பின்) |
| | | | 2. தி/ள். கன்ஸ்ட்ரானிக்ஸ் இண்டியா, சென்னை. | 6648215.30 | 7.63 % |
| 7 | கோயம்புத்தூர் மாநகராட்சிக்குட்பட்ட கிருஷ்ணம்பதி குளத்தில் ஆகாயத்தாமரை மற்றும் முட்புதர்கள் அகற்றும் பணி<br>கோ. எ.5307/ 2017/ JN4 | 6125463.43 | 1. தி/ள். வரதான் இன்ஃப்ரா ஸ்ட்ரக்சர், கோயம்புத்தூர். | 6497942.13 | 6.08 % |
| | | | 2. தி/ள். கேசிபி இன்ஜினியர்ஸ் பிரைவேட் லிமிடெட், சென்னை. | 6431378.40 | 4.99 % கூடுதல் (விலை குறைப்பிற்கு பின்) |
| 8 | கோயம்புத்தூர் மாநகராட்சிக்குட்பட்ட செல்வ சிந்தாமணி குளத்தில் ஆகாயத்தாமரை மற்றும் முட்புதர்கள் அகற்றும் பணி<br>கோ. எ.5308/ 2017/ JN4 | 5093660.34 | 1. தி/ள். வரதான் இன்ஃப்ரா ஸ்ட்ரக்சர், கோயம்புத்தூர். | 5419571.74 | 6.40 % |
| | | | 2. தி/ள். கன்ஸ்ட்ரானிக்ஸ் இண்டியா, சென்னை. | 5347567.21 | 4.98 % கூடுதல் (விலை குறைப்பிற்கு பின்) |

இப்பணிகளில் விலைகுறைப்பிற்கு பின் அளிக்கப்பட்ட குறைந்த ஒப்பந்த விலைப்புள்ளியினை ஏற்பதற்கு அனுமதி வேண்டி பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு: அனுமதிக்கலாம் ந.க.எண். 5782/2015/ஜே.என்4

**மாநகர மன்ற தீர்மானம் எண் 216 நாள் 17.08.2017**

அனுமதிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 14

பொருள் : ஸ்மார்ட் சிட்டி திட்டத்தின் கீழ் வெள்ளலூர் குப்பை கிடங்கு வளாகத்தில் புதியதாக ஏற்படுத்தப்படவுள்ள கூடுதல் திடக்கழிவுகளை கையாளக்கூடிய கட்டமைப்பு வளாகத்தில் பல்வேறு கட்டுமான பணிகளுக்கு ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டது – குறைந்த ஒப்பந்தப்புள்ளி வழங்கிய நிறுவனங்களை தேர்ந்தெடுக்க மாமன்றப்பொருள் – சமர்பித்தல் – தொடர்பாக.

-----------------------------

ஸ்மார்ட் சிட்டி திட்டத்தின் கீழ் வெள்ளலூர் குப்பை கிடங்கு வளாகத்தில் புதியதாக ஏற்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ள கூடுதல் திடக்கழிவுகளை கையாளக்கூடிய கட்டமைப்பு வளாகத்தில் மேற்கொள்ளப்படவுள்ள கீழ்கண்ட பல்வேறு கட்டுமான பணிகளுக்கு நிர்வாக அனுமதி கடந்த **12.06.2017– ல் வழங்கப்பட்டது.**

இப்பணிகளுக்கு கடந்த 21.07.2017 – ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் எல்லா பணிகளுக்கும் மூன்று நிறுவனங்கள் கலந்து கொண்டு ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ளது. இதில் ஒவ்வொரு பணிக்கும் இரு நிறுவனங்கள் தொழில் நுட்ப தகுதி பெற்றதால் கடந்த 04.08.2017– ல் விலைப்புள்ளிகள் திறக்கப்பட்டது.

(தொகை ரூபாயில்)

| வ. எ ண் | பணியின் பெயர் | ஒப்பந்தப் புள்ளி கோரிய தொகை ரூபாயில் | ஒப்பந்ததாரரின் பெயர் | ஒப்பந்த புள்ளி வழங்கிய தொகை | சதவீதம் |
|---|---|---|---|---|---|
| 1 | வெள்ளலூர் குப்பைக்கிடங்கு வளாகத்தில் புதியதாக ஏற்படுத்தப்படவுள்ள கூடுதல் திடக்கழிவுகளை கையாளக்கூடிய கட்டமைப்பு வளாகத்திற்கு சுற்றுச்சுவர் கட்டும் பணி<br>கோ.எ.5240/2017/ JN4 | 8268514.80 | 1. தி/ள். கன்ஸ்ட்ரானிக்ஸ் இண்டியா, சென்னை. | 8877525.00 | 7.37 % கூடுதல் |
| | | | 2. தி/ள். கேசிபி இன்ஜினியர்ஸ் பிரைவேட் லிமிடெட், சென்னை. | 8681335.00 | 4.99 % கூடுதல் (விலை குறைப்பிற்கு பின்) |
| 2 | வெள்ளலூர் குப்பைக்கிடங்கு வளாகத்தில் புதியதாக ஏற்படுத்தப்படவுள்ள கூடுதல் திடக்கழிவுகளை கையாளக்கூடிய கட்டமைப்பு வளாகத்திற்குள் உள்வட்டச் சாலைகள் அமைக்கும் பணி<br>கோ.எ.5241/2017/ JN4 | 8590694.30 | 1. தி/ள். வரதான் இன்.ஃப்ரா ஸ்ட்ரக்சர், கோயம்புத்தூர். | 9316650.00 | 8.45 % கூடுதல் |
| | | | 2. தி/ள். கேசிபி இன்ஜினியர்ஸ் பிரைவேட் லிமிடெட், சென்னை. | 9019205.00 | 4.99 % கூடுதல் (விலை குறைப்பிற்கு பின்) |
| 3 | வெள்ளலூர் குப்பைக்கிடங்கு வளாகத்தில் புதியதாக ஏற்படுத்தப்படவுள்ள கூடுதல் திடக்கழிவுகளை கையாளக்கூடிய கட்டமைப்பு வளாகத்தில் கணினி எடை மேடை அமைக்கும் பணி<br>கோ. எ.5242/ 2017/ JN4 | 1898179.10 | 1. தி/ள். கன்ஸ்ட்ரானிக்ஸ் இண்டியா, சென்னை. | 1920550.00 | 1.18 % கூடுதல் |
| | | | 2. தி/ள். மெட்ராஸ் இன்.ஃப்ரா, திருப்பூர். | 1897960.00 | -0.01 % குறைவு |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 4 | வெள்ளலூர் குப்பைக்கிடங்கு வளாகத்தில் புதியதாக ஏற்படுத்தப்படவுள்ள கூடுதல் திடக்கழிவுகளை கையாளக்கூடிய கட்டமைப்பு வளாகத்தில் புதிதாக அலுவலக கட்டிடம், காவலர் அறை, தொழிலாளர்கள் ஓய்வறை, வாகனங்கள் கழுவும் அறை மற்றும் கழிப்பறைகள் கட்டும் பணி<br><br>கோ.எ.5243/ 2017/ JN4 | 5896897.35 | 1. தி/ள். வரதான் இன்.்.ப்ரா ஸ்ட்ரக்சர், கோயம்புத்தூர். | 6406410.00 | 8.64 % கூடுதல் |
| | | | 2. தி/ள். கன்ஸ்ட்ரானிக்ஸ் இண்டியா, சென்னை. | 6190475.00 | 4.98 % கூடுதல் (விலை குறைப்பிற்கு பின்) |
| 5 | வெள்ளலூர் குப்பைக்கிடங்கு வளாகத்தில் புதியதாக ஏற்படுத்தப்படவுள்ள கூடுதல் திடக்கழிவுகளை கையாளக்கூடிய கட்டமைப்பு வளாகத்தில் ஆழ்குழாய் கிணறு அமைத்தல், மேல்நிலைத்தொட்டி கட்டுதல், கீழ்நிலை நீர்தேக்கத்தொட்டி கட்டுதல் மற்றும் நீர் பகிர்மான குழாய்கள் அமைக்கும் பணி<br><br>கோ.எ.5244/ 2017/ JN4 | 1316135.50 | 1. தி/ள். கேசிபி இன்ஜினியர்ஸ் பிரைவேட் லிமிடெட், சென்னை. | 1330975.00 | 1.13 % கூடுதல் |
| | | | 2. தி/ள். ஓசூர் பில்டர்ஸ், ஓசூர். | 1315865.00 | -0.02% குறைவு |
| 6 | வெள்ளலூர் குப்பைக்கிடங்கு வளாகத்தில் புதியதாக ஏற்படுத்தப்படவுள்ள கூடுதல் திடக்கழிவுகளை கையாளக்கூடிய கட்டமைப்பு வளாகத்திற்குள் பசுமை வளையம் அமைக்கும் பணி<br><br>கோ.எ.5245/ 2017/ JN4 | 1831307.69 | 1. தி/ள். மெட்ராஸ் இன்.்.ப்ரா, திருப்பூர். | 1903700.00 | 3.95% கூடுதல் |
| | | | 2. தி/ள். வரதான் இன்.்.ப்ரா ஸ்ட்ரக்சர், கோயம்புத்தூர். | 1830804.00 | -0.03% குறைவு |

இப்பணிகளில் விலைகுறைப்பிற்கு பின் அளிக்கப்பட்ட குறைந்த ஒப்பந்த விலைப்புள்ளியினை ஏற்பதற்கு அனுமதி வேண்டி பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு: அனுமதிக்கலாம் ந.க.எண்: **5062/2017/ஜேஎன்4**

**மாநகர மன்ற தீர்மானம் எண் 217 நாள் 17.08.2017**

அனுமதிக்கப்பட்டது.

---

**பொருள் எண் 15**

Atal Mission for Rejuvenation and Urban Transformation (AMRUT) திட்டத்தின் கீழ் **2017–2020 –**ம் ஆண்டுகளுக்கான Development of Green Spaces திட்டத்தின் கீழ் ரூ.**5.46** கோடி மதிப்பில் பூங்காக்கனை அமைக்க மதிப்பீடு தயாரித்து சமர்ப்பிக்குமாறு தமிழ்நாடு நிதி மற்றும் உட்புர கட்டமைப்பு நிறுவனத்தால் அறிவுறுத்தப்பட்டது.

கோயம்புத்தூர் மாநகராட்சியில் உள்ள கீழ்கண்ட எட்டு இடங்களில் பூங்காக்கள் அமைக்க அட்டவணையில் குறிப்பிடப்பட்ட மதிப்பீட்டில் தேர்வு செய்யப்பட்டுள்ளது.

| வ. எண் | பூங்கா அமைக்கும் பணி மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ள இடம் | ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகை (இலட்சத்தில்) |
|---|---|---|
| 1 | திருமுருகன் நகரில் பூங்கா | ரூ. 70.00 |
| 2 | எஸ். ஆர். கார்டனில் பூங்கா | ரூ. 69.00 |
| 3 | வி.கே.எல். நகரில் பூங்கா | ரூ. 60.00 |
| 4 | ஸ்ரீநிவாசா நகரில் பூங்கா | ரூ. 80.00 |
| 5 | பாலு கார்டனில் பூங்கா | ரூ. 57.00 |
| 6 | டெக்ஸ்டூல் காலனியில் பூங்கா | ரூ. 63.00 |
| 7 | சூப்பர் கார்டன் நகரில் பூங்கா | ரூ. 82.00 |
| 8 | நியூ கோல்டன் நகரில் பூங்கா | ரூ. 65.00 |
| | மொத்தம் | ரூ. 546.00 |

மேற்குறிப்பிட்ட எட்டு இடங்களில் பூங்கா அமைத்து அதைச்சுற்றி சுற்றுச்சுவர் கட்டும் பணி, நடைபாதை அமைக்கும் பணி, குழந்தைகளுக்கான விளையாட்டு உபகரணங்கள் அமைக்கும் பணி, நடைபயிற்சி மேற்கொள்வோருக்கு வழித்தடம் அமைத்தல் , செயற்கை நீரூற்றுகள் அமைத்தல், பூங்காக்களில் மின்விளக்கு மற்றும் குடிநீர் வசதி செய்து தருதல், சாய்வுதளம் அமைத்தல் பாதுகாவலர் அறை அமைத்தல் மற்றும் கழிவறை கட்டுதல் ஆகிய பணிகள்மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ளது.

| | | | |
|---|---|---|---|
| மத்திய அரசின் பங்கு | 33 % = 5.46 x 33/100 | = ரூ. | 180.18 இலட்சம் |
| மாநில அரசின் பங்கு | 20 % = 5.46 x 20/100 | = ரூ. | 109.20 இலட்சம் |
| மாநகராட்சியின் பங்கு | 47 % = 5.46 x 47/100 | = ரூ. | 256.62 இலட்சம் |

என நிதி பங்கீடு செய்யப்பட்டுள்ளது. எனவே மேற்கண்ட இடங்களில் பூங்காக்கள் அமைக்கும் பணி மேற்கொள்ள மாமன்றத்தின் அனுமதி வேண்டி மாமன்றத்திற்கு மன்றப்பொருள் வரைவு சமர்பிக்கப்படுகிறது.

Council Resolution

1. Resolved that the Coimbatore City Municipal Corporation is authorizing the Commissioner to borrow the GOI and GOTN grant of Rs.180.18 lakh and 109.20 lakh under the Atal Mission of Scheme for the following project as per the terms and conditions prescribed by TUFIDCO:

(Rs.in Lakhs)

| Name of the project / Scheme No. | Approved cost | GOI share (33%) | GTN share (20%) | ULB Share (47%) |
|---|---|---|---|---|
| Development of Green spaces and 8 parks | 546.00 | 180.18 | 109.20 | 256.62 |

2. Resolved that the Coimbatore City Municipal Corporation agrees the terms and conditions mentioned in the sanction letter and agrees to execute the project as per the AMRUT guideline.
3. Further resolved that the council of Coimbatore City Municipal Corporation will take necessary steps for implement/ maintenance of the parks through PPP mode.

அலுவலக்குறிப்பு : அ) கோவை மாநகராட்சியில் அம்ருட் திட்டத்தின் கீழ் தேர்ந்தெடுக்கப்பட்ட எட்டு இடங்களில் பூஙகாக்கள் அமைக்கும் திட்டத்திற்கு அனுமதி வழங்கலாம்.

ஆ) அம்ருட் திட்டத்திற்காக ஒதுக்கப்பட்ட நிதிப்பங்கீட்டில் மாநகராட்சியின் 47% பங்குத்தொகையை பொது நிதியிலிருந்து மேற்கொள்ள அனுமதி வழங்கலாம்.

ந.க. எண். 6998/2015/ஜே.என்4

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 218 நாள் 17.08.2017</u>**

அனுமதிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 16

கோயம்புத்தூர் மாநகராட்சி பகுதிகளில் அபிவிருத்திப் பணிக்கு ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு கீழ்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளன. இப்பணிக்கு வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளியினை ஒப்பந்தப்புள்ளி திறனாய்வுக்குழு பரிசீலனை செய்து கீழ்கண்டவாறு பணியினை ஏற்க பரிந்துரை செய்துள்ளது.

| வ எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை ரூ லட்சத்தில் | நிர்வாக அனுமதி நாள் | ஒப்பந்தப் புள்ளி நாள் | பெறப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் | தேர்வு செய்யப்பட்ட ஒப்பந்ததாரர் |
|---|---|---|---|---|---|---|
| 1 | வார்டு எண்.17 க்குட்பட்ட விஜய் நகர் மற்றும் ஆதித்யா அவென்யூ பகுதியில் ஆழ்குழாய் கிணறு அமைத்தல் ந.க.எண்.3349/2017/எம்.டி.2 | 9.00 | ம.தீ.எண். 20 நாள். 12.04.17 | 12.06.17 முதலாம் அழைப்பு | 1). தி/ள்.செவ்வேல் அன் கோ 1.35% அதிகம் 2). தி/ள்.ஸ்ரீ சௌபர்ணிகா அசோசியேட்ஸ் 0.15% குறைவு | தி/ள்.ஸ்ரீ சௌபர்ணிகா அசோசியேட்ஸ் 0.15% குறைவு |

மேற்கண்ட அட்டவணையில் குறிப்பிட்டுள்ள பணியின் ஒப்பந்தபுள்ளியினை ஏற்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு:- அனுமதிக்கலாம். ந.க.எண்.3349/2017/எம்டி2

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 219 நாள் 17.08.2017</u>**

அனுமதிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 17

கோயம்புத்தூர் மாநகராட்சி மேற்கு மண்டலம் வார்டு எண்.17-க்குட்பட்ட பகுதியில் மழைநீர் வடிகால் கட்டுதல் பணிகளுக்கு மதிப்பீடு தயார் செய்து மேற்படி பணிகளை விரைந்து செய்து முடிக்க ஆணையாளர் மற்றும் தனி அலுவலர் அவர்களின் உத்தரவிற்கிணங்க மதிப்பீடுகள் தயார் செய்யப்பட்டுள்ளது. அதன் விபரம் பின்வருமாறு :-

| வ எண். | வார்டு எண். | வேலையின் பெயர் | மதிப்பீடு (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|---|
| 1 | 17 | வார்டு எண் - 17-ல் பொன் நகர் பகுதியில் மழைநீர் வடிகால் கட்டுதல். ந.க.எண். /17/எம்.டி2 | 28.00 |

மேற்காண் பட்டியலில் குறிக்கப்பட்டுள்ள பணிகளுக்கு மாமன்றத்தின் நிர்வாக அனுமதி வேண்டி பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு : அனுமதிக்கலாம் ந.க.எண்.8423/17/எம்.டி2

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 220 நாள் 17.08.2017</u>**

அனுமதிக்கப்பட்டது.

---

க. விஜயகார்த்திகேயன்
ஆணையாளர் மற்றும் தனி அதிகாரி
கோயம்புத்தூர் மாநகராட்சி